**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ்.40/2025**
**2026 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 – ம் நாள் வெள்ளிக் கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **விமலாதேவி** | **சாதி** | : | |
| **த/பெ** | : | | **சமயம்** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | **வயது** | : | |

**வா.சா. 2 ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 2 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. என்னுடைய ஆதார் அடையாள அட்டை **வா.சா.ஆ 11** ஆகும்.

( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 ம் வாதி உங்களுக்கு என்ன உறவுமுறை என்றால் தம்பி உறவுமுறை ஆகும். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

யாருக்கு வாரிசு சான்று கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கேட்டால் என்னுடைய அத்தை ராஜேஸ்வரி என்பவருக்கு வாரிசு சான்று கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர் 13.05.2021 ம் தேதி இறந்தார்.

அவருக்கு குழந்தை இல்லை. அவருடைய கணவர் 2020 ம் ஆண்டு இறந்துவிட்டார். தேதி, மாதம் ஞாபகமில்லை. இறந்தவர் எனது அத்தை என்பதால் என்ன வகையில் வாரிசு சான்று கேட்கிறீர்கள் என்றால் அவர் என்

அப்பாவுடன் பிறந்தவர் என்பதால் வாரிசு சான்று கேட்கிறேன். என் அம்மா, அப்பா இறந்தவுடன் என்னை என் அத்தை தான் வளர்த்து வந்தார்.

நீங்களும், உங்கள் தம்பியும் உங்கள் அத்தையின் இறுதி சடங்கு நடத்தியதாக சொல்லும் போது கிராமத்தில் உள்ள பொதுவான நபரை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**